Registered as a NewsPaper

பக்கங்கள் - iv

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

R:A:Nelsan Yasarathne
T.P: 024 -23318
NELSON LEARNERS
(Government Approved "A" Grade Driving School)
Reg No :D.S.242
சிறிய வாகனம் முதல் பெரிய வாகனம் வரை பயிற்சிகொடுத்து லைசன்ஸ் கொடுக்கப்படும்.
கிளை: வவுனியா, யாழ்ப்பாணம்.
No:86, Bus Stand Complex Vavuniya.

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | ஆவணி - 05 | 22-08-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 195

# தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பிரான்ஸ் அரசாங்கம் அங்கீகாரம்

## பாரிசில் செய்தியாளரிடம் சு.ப. தமிழ்ச்செல்வன்

**தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு பிரான்ஸ் அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன பிரான்சிலிருந்து ஒளிபரப்பாகும் ரி.ரி.என் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் கூறியுள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவினர் நேற்றுக் காலை பிரான்சைச் சென்றடைந்தபொழுது ரி.ரி.என் செய்தியாளர் கேட்ட கேள்விக்கு பதில் வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக தெரிவிக்கையில்; பிரான்ஸ் அரசாங்கத்தின் விருப்பத்தின் அடிப்படையில் தான் நாம் இந்த மாநாட்டை இங்கே நடத்தத் தீர்மானித்திருக்கின்றோம். பிரான்ஸ் தூதரகம் எங்களை வரவேற்று உடனடியாக இதற்கான அனுமதியினைத் தந்தது எனக் கூறினார். வட-கிழக்கு மாகாணங்களை தனித்தனியாக பிரிக்கப் போவதாக சனாதிபதி சந்திரிகா விடுத்த அறிக்கை தொடர்பாக, கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்; வட-கிழக்கு மாகாணத்தினைப் பிரிப்பது என்பது அவரின் கனவு எனவும் கூறினார். உங்களுடைய இடைக்கால நிர்வாகத் திருத்த (IV ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியினை அழிக்க நடவடிக்கை

விடுதலைப்புலிகளின் கட்டுபபாட்டுப் பகுதியில் எவ்ஏரி கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தால் மீட்டெடுக்கப்பட்ட கண்ணிவெடிகளில் ஒரு பகுதியினை அழிக்க இந்நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்நிறுவனத்தால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட் (IV ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் கொலைகளின் பின்னணியில் அமைதியைக் குழப்பும் அரசியல்வாதிகள்

### மட்டு - அம்பாறை அரசியல்துறை தெரிவிப்பு

அம்பாறை மாவட்டத்தில் உருவாகியுள்ள பதற்றம் மற்றும் அமைதியற்ற சூழ்நிலை குறித்து விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல்துறை நேற்று மாலை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

சம்மாந்துறையில் அண்மையில் இரு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் அமைதியானசூழலைக் குழப்பும் சில அரசியல்வாதிகள் இருப்பதாக இவ் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சம்பவத்தின் எதிரொலியாக இடம்பெற்று வரும் வன்முறைகள் தொடருமானால் தமிழ், முஸ்லிம் மக்கள் தான் இழப்புக்களைச் சந்திக்க நேரி (IV ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் படையினரின் நடவடிக்கையால்

# மக்கள் போக்குவரத்துச் சேவை சீர்குலையும் அபாயநிலை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியில் மக்கள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஒரே ஒரு பேருந்து சேவையும் சீர்குலையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; நேற்று மாலை 4.30 மணியளவில் நெடுந்தீவுத் துறையில் இருந்து மக்களை ஏற்றிச் சென்ற பேருந்து சாரதியை அங்கு காவலில் நிற்கும் (IV ஆம்பக்கம் பார்க்க)

## அம்பாறையில் கைக்குண்டுவீச்சு

(மட்டக்களப்பு)

அம்பாறை காரைதீவு பகுதியிலுள்ள சிறிலங்கா தேவாலயம் ஒன்றின் மீது நேற்று நண்பகல் கைக்குண்டு வீசப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களினால் இக்குண்டு வீசப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஆலய வளவுக்குள் கைக்குண்டு வீழ்ந்து வெடித்த போதிலும் குறிப்பிடத்தக்க சேதமெதுவும் ஏற்படவில்லை.

## அம்பாறை கல்முனையில் முஸ்லிம் பகுதிகளில் ஹர்த்தால்

அம்பாறை கல்முனைப் பகுதியில் நேற்று பதற்றம் நிலவியது. இங்கு முஸ்லிம் பகுதிகளில் ஹர்த்தால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

சாய்ந்த மருதுவில் இருந்து கடந்த செவ்வாயன்று தொழில் நிமித்தம் ஓட்டமாவடிக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய இரு முஸ்லிம்கள் காணாமற்போயுள்ளதையடுத்தே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது சாய்ந்தமருது சமூக விழிப்புக் குழு இதற்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில், காணாமற்போன முஸ்லிம்கள் குறித்து பல்வேறான வதந்திகள் பரப்பப்பட்டதால் நேற்று அங்கு பதற்றம் நிலவியது. (IV ஆம்பக்கம் பார்க்க)

## வவுனியா வடக்குப் பிரதேசத்தில்

# மீளக்குடியமர்ந்துள்ள மக்களுடன் விடுதலைப்புலிகள் சந்திப்பு

வவுனியா வடக்கு பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது. வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையில் காலை 10.00 மணிக்கு பன்றிக்கெய்தகுளத்திலும், மாலை 2.00 மணிக்கு சேமமடு சண்முகானந்த மகாவித்தியாலயத்திலும் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் கலந்து கொண்டு இன்றைய நிலைப்பாடுகள் தொடர்பாகவும், பாரிஸ் மாநாடு தொடர்பாகவும் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறினார். இக்கலந்துரையாடலில் மாவீரர், (IV ஆம்பக்கம் பார்க்க)

## மக்கள் மறியல்

(வவுனியா)

வவுனியா மடு வீதி பொது மக்களின் போக்குவரத்திற்கு இராணுவம் இடையூறு விளைவிப்பதைக் கண்டித்து நேற்று முன்தினம் மக்களால் மறியல் போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. சமாதான சூழலையடுத்து மடு வீதி திறக்கப்பட்டிருந் தாலும் கூட இவ்வீதியின் ஊடாக மடுத் தேவாலயத் (IV ஆம்பக்கம் பார்க்க)

## - மட்டு. சந்திவெளியில் -

# இருவரின் சடலம் உள்ளதாக பரவிய வதந்தியால் பதற்றம்

அம்பாறை சாய்ந்த மருதைச் சேர்ந்த இருவர் கடத்தப்பட்டதாகவும் அவர்களின் சடலங்கள் மட்டக்களப்பு சந்திவெளியில் காணப்படுவதாகவும் தகவல் வெளியானதையடுத்து அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று பதற்ற நிலை ஏற்பட்டது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன், வீதிகளில் தடைகள் போடப்பட்டு போக்குவரத்தும் தடை செய்யப்பட்டது. பொலிசார் நடத்திய தேடுதலின்போது சடலம் எதுவும் காணப்படவில்லை. இதே வேளை, சாய்ந்தமருது பகுதியில் தமிழர்கள் தாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சாரதி பலி

(ஒட்டுசுட்டான்)

கனரக வாகனம் ஒன்றில் ஏற்பட்ட சிறு கோளாறினைத் திருத்த முயன்ற சாரதி அவ்வாகனம் அவர் மீது ஏறியதால் பரிதாபகரமாக சாவடைந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை ஏழுமணியளவில் வட்டக்கச்சி புளியம்பொக்கணை வீதியில் இடம்பெற்றுள்ளது. வாகனத்தை இயக்க முயன்றவேளை அதில் கோளாறு (IV ஆம்பக்கம் பார்க்க)

# கிழக்கு பாதுகாப்புக் குறித்து ரணில் - கூட்டமைப்பு சந்திப்பு

## முஸ்லிம் பா.உ.களும் கலந்துகொள்வர்

கிழக்கின் பாதுகாப்பு நிலைமை மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் சில முக்கிய விடயங்கள் குறித்து எதிர்வரும் 26ஆம் திகதி பிரதமருடன் விசேட சந்திப்பொன்றை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நடத்தவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இதனை நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்ற கூட்டத் தொகுதியில் நேற்று பிரதமர் ரணில் விக் (IV ஆம்பக்கம் பார்க்க)

# பலாலி முகாமின் 600 மீற்றர் சுற்றாடலில் மக்கள் குடியேறப் படையினர் தடை

குப்பிழான் வடக்கில் பலாலி இராணுவ முகாமின் எல்லையில் இருந்து 600 மீற்றருக்குள் மக்கள் புதிதாகக் குடியேற சிறிலங்காப் படையினர் தடை விதித்துள்ளனர்.

ஏற்கனவே அப்பகுதியில் மக்கள் குடியேறியுள்ள நிலையில் படையினரின் இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளது. கடந்த பத்து மாதங்களுக்கு முன்னர் அப்பகுதியில் உள்ள குடும்பங்களின் விபரங்களைச் சேகரித்திருந்த படையினர், அவர்களுக்கான குறியீட்டு இலக்கங்களையும் வழங்கியிருந்தனர். சில தினங்களின் முன் (IV ஆம்பக்கம் பார்க்க)

## சந்திப்பு பிற்போடல்

(வவுனியா)

தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் மூதூர் பிரதேச முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று திருமலை மாவட்ட போர்நிறுத்தகண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற இருந்த சந்திப்பு காலவரையறை இன்றி பிற்போடப்பட்டுள்ளது. மேற்படி சந்திப்பில் மூதூர் பிரதேச சமகால நிலை தொடர்பாக பேசப்படும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் இச்சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**மீட்புநிதி மீளளிப்பு விபரம் உள்ளே...**

# புலிகளின் பதில் வரைவை முதலில் நோர்வே ஏற்பாட்டாளர்கள் பரிசீலிப்பர்

## அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு



(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அரசு கையளித்துள்ள இடைக்கால நிர்வாகம் குறித்த திட்ட வரைவிற்கு புலிகள் சமர்ப்பிக்கப்போகும் பதில் வரைவை நோர்வே ஏற்பாட்டாளர்களே பரிசீலிப்பார்கள் என அமைச்சர் பீரிஸ் நேற்று பாராளுமன்றத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகள் தற்போது ஆராய்ந்து வரும் இடைக்கால நிர்வாக திட்டவரைவில் புதிதாக இணைக்கும் தீர்மானங்களை புலிகள் நோர்வே தரப்பிடம் கையளிப்பார்கள். இவ்வாறு கையளிக்கப்பட்ட பின்னர் நோர்வே தரப்பினர் அரசு புலிகளிடம் சமர்ப்பித்த இடைக்கால சட்டவரைவு பற்றியும் அதற்கு புலிகள் சமர்ப்பித்த பதில் (IV ஆம்பக்கம் பார்க்க)

## பணிநிலை வேண்டுகை

திரைப்பட வெளியீட்டுப் பிரிவில் கீழ் குறிப்பிடப்படும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:**

01) தொடர்பாளர்.
02) தொடர்பக இணைப்பாளர்.
03) தணிக்கையாளர்.

**கல்வித்தகைமை:**

10ம் ஆண்டு கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:** 18 அகவைக்கு மேற்பட்டவராகவும் 40 அகவைக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

வேண்டுகைகள் 30.08.2003ம் திகதிக்கு முன் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, விசுவமடு, கிளிநொச்சி, பளை, மருதங்கேணி, கந்தபுரம், முழங்காவில், பள்ளமடு, துணுக்காய், கனகராயன்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள திரைப்பட வெளியீட்டுப்பிரிவு தொடர்பகங்களுக்கு அனுப்பி வைக்கவும்.

(3657) திரைப்பட வெளியீட்டுப் பிரிவு.

## பாலமுருகன் அரிசி ஆலை



22.08.2003 இன்று முதல் உருத்திரபுரம் வீதி 5ஆம் வாய்க்காலில் அதே இடத்தில் மீண்டும் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

*5ம் வாய்க்கால்,*
*உருத்திரபுரம் வீதி,*
*கிளிநொச்சி.*

*உரிமையாளர்,*
*இராமநாதன்.*

(3656)

## எழுச்சிப் பேரவை தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய்ப் பிரதேச பாரதிநகர் கிராம சேவையாளர் பிரிவில் ஊரக எழுச்சிப் பேரவை தெரிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 07 மணியளவில் பாரதிநகர் பூபாலினி விளையாட்டுக்கழக மண்டபத்தில் அரசியல் துறையைச் சேர்ந்த போராளி நா. இசைப்பிரியன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஊரக எழுச்சிப் பேரவை தொடர்பான கருத்துரைகளைப் போராளி இசைப்பிரியன் மற்றும் அரசியல் துறையைச் சேர்ந்த பொ.தனம் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. (பா)

## கூட்டம்

கிளி.மாவட்ட பல்கலைக்கழகங்களுக்கான புகுமுக மாணவர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து புகுமுக மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் இதுவரை ஒன்றியத்தில் பதிவு செய்யாத கனிஷ்ட மாணவர்களை அன்றைய தினம் பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

வீடு, மலசலகூடத்துடன் 1 ஏக்கர் குடியிருப்புக் காணியும் (இல-68) 1 1/2 ஏக்கர் வயல் காணியும் வட்டக்கச்சியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீமுருகன் இரும்பகம், யாழ்.சாலை, கிளிநொச்சி. (3654)

## கிளினிக் சிகிச்சை இடமாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி முதலாம் கட்ட வைத்தியசாலையில் இதுவரை நடைபெற்று வந்த கிளினிக் சிகிச்சைகளும் கிளி.மாவட்ட வைத்திய சாலையில் நடைபெறுகிறது. கிளினிக்குகள் நேற்று முதல் நகர வைத்தியசாலையில் நடைபெறுவதாக கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

## தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் பிரபல்ய வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு வேலை ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

01. **கணக்குப்பதிவாளர்கள் (பெண்கள்)**
02. **சிட்டை எழுதுநர் (ஆண்கள்)**
03. **நிறுவையாளர் (ஆண்கள்)**

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரக் கோவையை 29.08.2003க்கு முன்னதாக கிடைக்கும்படி அனுப்பவும்.

*விள. இல- 111*
*ஈழநாதம்.*
*கிளிநொச்சி.*

(3655)

## 45 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பிதழும்

மண்ணில்: 08 - 04 - 1954



விண்ணில்: 09 - 07 - 2003

### அமரர். செல்வி. கயிலாயபிள்ளை விஜயலட்சுமி
[அதிபர், ஒட்டுசுட்டான் ம.வி.]

தன்னை உருக்கி உற்றார், உறவினர் மாணவர்கள் மற்றையோர் உயர்விற்கு வழிகாட்டி ஒளியூட்டிய எமது அன்புத் தெய்வத்தின் 45 ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் எமது இல்லத்தில் 22 – 08 – 2003 இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*மருது வீதி.*
*7ம் வட்டாரம்.*
*புதுக்குடியிருப்பு.* (3658)

*நினைவுடன்,*
*திருமதி. க. இராஜேஸ்வரி (கமலம்).*

## கொல்லவிளாங்குளம் ஊடாகப் பேருந்துப்பணி

கொல்லவிளாங்குளம் மக்கள் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி பணி எதிர்வரும் 25.08.2003 ஆம் நாளில் தொடங்கி காலை 06.45 மணிக்கு கொல்லவிளாங்குளத்தை அடையுமாறு நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**முகாமையாளர்,**
**பயணியர் போக்குவரவு ஊர்தி,**
**வழியனுமதிப் பணியகம்.**

(சி-8472)

## கிளிநொச்சி – புளியங்குளம் பேருந்துப் பணி, முகமாலை – கிளிநொச்சி – புளியங்குளம்

## பணியாக மாற்றம்



மேற்படி பணி 25-08-2003 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனைப் பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு:**

### முகமாலை (பளை) - கிளிநொச்சி - புளியங்குளம்

| | முகமாலை (பளை) | இயக்கச்சி | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|---|---|---|
| காலை | 05.00 | 05.40 | 06.15 | 06.45 | 07.45 | 08.30 |
| காலை | 09.30 | 10.10 | 10.45 | 11.15 | 12.15 | 01.30 |
| பகல் | 12.30 | 01.10 | 01.45 | 02.15 | 03.15 | 04.00 |

### புளியங்குளம் - கிளிநொச்சி - முகமாலை (பளை)

| | புளியங்குளம் | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | இயக்கச்சி | முகமாலை (பளை) |
|---|---|---|---|---|---|---|
| காலை | 08.45 | 09.30 | 10.30 | 11.00 | 11.35 | 12.15 |
| பகல் | 01.30 | 02.15 | 03.15 | 03.45 | 04.20 | 05.00 |
| மாலை | 04.00 | 04.45 | 05.45 | 06.15 | 06.50 | 07.30 |

குறிப்பு : முறிகண்டியில் 20 மணித்துளிகள் நிற்கும். நேர ஒழுங்கில் புறப்படும் நேரமே குறிக்கப்பட்டுள்ளது.

முகாமையாளர்,
தம்மீழப் போக்குவரவுக் கழகம்,
கிளிநொச்சி.

(சி-8471)

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் - 2003

**தமிழீழ மீட்புநிதிக் கடன்திட்டத்தின்கீழ் கடன் செலுத்தியோரில் 1500 பேர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு தொகுதியினரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மிகுதி நாளைய ஈழநாதம் நாளேட்டில் வெளியிடப்படும். இவ் 1500 பேருக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் நாளிலிருந்து 21 ஆம் நாள்வரை கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.**

## மீளளிப்பு நடைமுறைகள்:

1. கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகைதந்து கடனை மீளப்பெற வேண்டும்.
2. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதர வேண்டும்.
3. கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டு வரவேண்டும்.
   - இறப்புச் சான்றிதழ்
   - இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)
   - கடன் சான்றிதழ்
   - பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
   - பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்
4. கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப் படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
5. அ) மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.

   ஆ) அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5அங்.2.0அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

## கிளிநொச்சி மாவட்டம்

| தொடர்பு எண் | முழுப் பெயர் |
|---|---|
| வ/கி/43 | திருமதி. புஸ்பமலர் இராசேந்திரலிங்கம் |
| வ/கி/84 | திருமதி. பூமணி தம்பிஐயா |
| வ/கி/188 | திரு. கந்தையா சர்வேஸ்வரன் |
| வ/கி/234 | திருமதி. துவாரகாதேவி வல்லிபுரம் |
| வ/கி/376 | திரு. சின்னத்தம்பி சரவணமுத்து |
| வ/கி/405 | திரு. தம்பிப்பிள்ளை தியாகராசா |
| வ/கி/426 | திரு. வல்லிபுரம் குலசேகரம்பிள்ளை |
| வ/கி/488 | திரு. செல்லப்பா சற்குருநாதன் |
| வ/கி/505 | திரு. செல்லையா பிரேமராஜா |
| வ/கி/515 | திரு. சபாபதி நடராசா |
| வ/கி/610 | திரு. விஸ்வநாதன் இராசசுந்தரம் |
| வ/கி/631 | திரு. தம்பிப்பிள்ளை உதயகுமார் |
| வ/கி/636 | திரு. கணபதிப்பிள்ளை ஆறுமுகம் |
| வ/கி/655 | திருமதி. சிரோன்மணி சின்னத்தம்பி |
| வ/கி/666 | திருமதி. யோகேஸ்வரி மகேந்திரன் |
| வ/கி/689 | திரு. சூசைப்பிள்ளை றெமீந்திரன் அமலன்சேய் |
| வ/கி/695 | திரு. நாராயணபிள்ளை நவரத்தினம் |
| வ/கி/722 | திரு. சின்னையா சின்னத்தம்பி |
| வ/கி/757 | திரு. முருகேசு சுப்பிரமணியம் |
| வ/கி/789 | திரு. தம்பையா குகதாசன் |
| வ/கி/836 | திருமதி. இரத்தினம் சபாரஞ்சிதன் |
| வ/கி/852 | திரு. சேதுபதி ஜீவரத்தினம் |
| வ/கி/868 | திரு. கந்தையா நாகலிங்கம் |
| வ/கி/916 | திரு. பொன்னையா முருகுப்பிள்ளை |
| வ/கி/960 | திரு. நடராசா நகுலேஸ்வரன் |
| வ/கி/992 | திரு. தம்பிமுத்து ஞானேஸ்வரன் |
| வ/கி/1099 | திருமதி. புஸ்பராணி அம்பலவாணர் (அருளம்பலம்) |
| வ/கி/1191 | திருமதி. சந்திரமதி கணபதிப்பிள்ளை |
| வ/கி/1222 | திரு. சிற்றம்பலம் சிவசுப்பிரமணியம் |
| வ/கி/1259 | திரு. இராசையா சிவராசா |
| வ/கி/1274 | திரு. இராமுப்பிள்ளை தேவராசா |
| வ/கி/1330 | திரு. கந்தசாமி சிவலோகநாதன் |
| வ/கி/1354 | திரு. முருகையா தவபாலன் |
| வ/கி/1360 | திரு. குப்புசாமி நாகராசா |
| வ/கி/1362 | திரு. செல்வரத்தினம் குமாரகுலம் |
| வ/கி/1529 | திரு. இராமநாதர் நாகேந்திரம் |
| வ/கி/1554 | திரு. இருளாண்டி இராசசந்திரன் |
| வ/கி/1572 | திரு. சிதம்பரப்பிள்ளை பூசைமாணிக்கம் |
| வ/கி/1695 | திரு. குமாரசாமி சிவசிதம்பரம் |
| வ/கி/1714 | திரு. தம்பையா அன்னலிங்கம் |
| வ/கி/1789 | திரு. கிருஷ்ணசாமி கிருஷ்ணகுமார் |
| வ/கி/1816 | திரு. கார்த்திகேசு பேரின்பவேலுப்பிள்ளை |
| வ/கி/1856 | திரு. தம்பிப்பிள்ளை சிவகுமாரன் |
| வ/கி/1862 | திரு. மாணிக்கம் சிவபாலன் |
| வ/கி/1875 | திருமதி. நாகரத்தினம் சோமசுந்தரம் |
| வ/கி/1949 | திருமதி. மகேஸ்வரி குமாரசாமி |
| வ/கி/2153 | திரு. சண்முகம் நாகலிங்கம் |
| வ/கி/2157 | திரு. முத்தர் சின்னத்தம்பி |
| வ/கி/2177 | திரு. வல்லிபுரம் கனேசு |
| வ/கி/2179 | திரு. சிவலிங்கம் செல்வரத்தினம் |
| வ/கி/2224 | திரு. பொன்னுத்துரை துரைசிங்கம் |
| வ/கி/2333 | திரு. கனகரெத்தினம் அமுதராசா |
| வ/கி/2381 | திரு. செல்லத்துரை சண்முகநாதன் |
| வ/கி/2407 | திரு. மரியாம்பிள்ளை அன்ரன் இராசநாதன் |
| வ/கி/2435 | திரு. சொக்கலிங்கம் கதிரேசு |
| வ/கி/2448 | திரு. வேலுப்பிள்ளை தெய்வவேற்பரமநாதன் |
| வ/கி/2459 | திரு. மயில்வாகனம் சந்திரகுமார் |
| வ/கி/2572 | திரு. வேலுப்பிள்ளை முருகேசு |
| வ/கி/2604 | திருமதி. குலானந்தவதி நித்தியானந்தராசா |
| வ/கி/2643 | திரு. சுப்பிரமணியம் விஜயரத்தினம் |
| வ/கி/2659 | திரு. கணபதிப்பிள்ளை நித்தியானந்தராசா |
| வ/கி/2706 | திரு. செல்லர் இராசு |
| வ/கி/2716 | திரு. தோமாஸ் ஸ்ராலின் |
| வ/கி/2720 | திருமதி. பகவதிப்பிள்ளை திருநாவுக்கரசு |
| வ/கி/2737 | திரு. வல்லிபுரம் துரைராசா |
| வ/கி/2751 | திரு. மயில்வாகனம் தர்மலிங்கம் |
| வ/கி/2783 | திரு. கந்தையா சின்னத்துரை |
| வ/கி/2816 | திரு. பொன்னையா தேவராசா |
| வ/கி/2858 | திரு. மார்க்கண்டு குலத்துங்கம் |
| வ/கி/2878 | திரு. சின்னத்தம்பி தவராசா |
| வ/கி/2896 | திரு. ஞானப்பிரகாசம் சிவலிங்கம் |
| வ/கி/3013 | திரு. பொன்னையா முருகையா |
| வ/கி/3053 | திரு. சதாசிவம் அருட்பிரகாசம் |
| வ/கி/3057 | திருமதி. நாகேஸ்வரி அருணாசலம் |
| வ/கி/3071 | திரு. பிலிப்புப்பிள்ளை மரியதாசன் |
| வ/கி/3080 | திரு. கணபதி இராசேந்திரம் |
| வ/கி/3110 | திரு. கணபதி செல்லத்துரை |
| வ/கி/3165 | திரு. சின்னத்தம்பி கிருஷ்ணதாசன் |
| வ/கி/3168 | திரு. சோமசுந்தரம் பாக்கியநாதன் |
| வ/கி/3205 | திரு. ஞானமுத்து அலன்றோஸ் |
| வ/கி/3303 | திரு. சதாசிவன் சற்குணநாதன் |
| வ/கி/3314 | திரு. ஆண்டி வேலும்மயிலும் |
| வ/கி/3372 | திரு. நாகலிங்கம் பேரம்பலம் |
| வ/கி/3423 | திருமதி. இரத்தினேஸ்வரி பாலகிருஸ்ணன் |
| வ/கி/3482 | திரு. வல்லிபுரம் தாமு |
| வ/கி/3556 | திரு. பொன்னையா ஜேசுரட்ணம் |

## வவுனியா மாவட்டம்

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| வ/வ/93 | திரு. சம்புநாதன் சிவரத்தினம் |
| வ/வ/135 | திரு. கணபதிப்பிள்ளை சின்னத்துரை |
| வ/வ/143 | திருமதி. புஸ்பராணி ஞானசேகரம் |
| வ/வ/144 | திருமதி. சரஸ்வதி மாணிக்கவாசகர் |
| வ/வ/166 | திரு. கிருஷ்ணன் மாயகிருஷ்ணன் |
| வ/வ/192 | திரு. சிதம்பரப்பிள்ளை தணிகாசலம் |
| வ/வ/208 | திரு. தில்லையம்பலம் சேனாதிராசா |
| வ/வ/243 | திரு. கந்தையா காசிநாதர் |
| வ/வ/345 | திரு. பொன்னுத்துரை தெய்வேந்திரன் |
| வ/வ/363 | திரு. சந்தையா கந்தசாமி |
| வ/வ/390 | திரு. கதிரேசு தருமலிங்கம் |
| வ/வ/395 | திரு. கதிரவேலு வினாசித்தம்பி |
| வ/வ/398 | திரு. நமசிவாயம் மங்களேஸ்வரன் |
| வ/வ/404 | திரு. நல்லையா தர்மபாலன் |
| வ/வ/408 | திருமதி. இந்திராணி வேலாயுதவேல் |
| வ/வ/445 | திரு. கனகசபை சிவசம்பு |
| வ/வ/547 | திரு. கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் |
| வ/வ/518 | திரு. சோனமுத்து பேரின்பகுமார் |
| வ/வ/639 | திருமதி. செல்வபாக்கியம் பிறைசூடி |
| வ/வ/680 | திரு. அந்திரேஸ் சின்னத்துரை |

## முல்லைத்தீவு மாவட்டம்

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| மு/42 | திரு. சின்னர் சின்னத்தம்பி |
| மு/83 | திருமதி. தவபாக்கியம் ஆனந்தராசா |
| மு/115 | திரு. முத்துத்தம்பி செல்வநாயகம் |
| மு/130 | திரு. சின்னக்குட்டி பொன்னம்பலம் |
| மு/137 | திரு. இராசையா செல்லத்துரை |
| மு/160 | திரு. செல்லையா தேவதாஸ் |
| மு/188 | திருமதி. சிவராணி பஞ்சாட்சரம் |
| மு/197 | திரு. கதிரவேலு சிவகுருநாதன் |
| மு/208 | திரு. கயிலாசபிள்ளை தம்பிராஜா |
| மு/297 | திருமதி. ஞானரஞ்சிதம் சிறில் |
| மு/306 | திரு. தங்கரத்தினம் தவராஜ் |
| மு/335 | திரு. கதிரவேலு பொன்னையா |
| மு/370 | திருமதி. கிருஸ்ணாம்பாள் சுப்பிரமணியம் |
| மு/413 | திரு. பூபாலபிள்ளை பொன்னம்பலம் |
| மு/484 | திரு. சண்முகம் செல்வானந்தம் |
| மு/532 | திருமதி. நல்லம்மா கந்தையா |
| மு/536 | திருமதி. இராசமணி கனகலிங்கம் |
| மு/563 | திரு. நாகலிங்கம் தியாகராசா |
| மு/577 | திரு. அன்னராசா அழகராசா |
| மு/641 | திரு. கனகசபை சிங்கரத்தினம் |
| மு/704 | திருமதி. தேவிகாராணி பாலசிங்கம் |
| மு/715 | திருமதி. பத்மாவதி கந்தையா |
| மு/722 | திரு. பாலசுந்தரம் கிரிதரன் |
| மு/740 | திருமதி. நல்லம்மா கந்தையா |
| மு/767 | திரு. பொன்னம்பலம் செல்வக்குமாரசாமி |
| மு/804 | திரு. சிதம்பரப்பிள்ளை கதிர்காமு |
| மு/877 | திரு. தம்பு நல்லதம்பி |
| மு/892 | திரு. முகமதுஅலி முத்து அருள்ராசா |
| மு/900 | திரு. பொன்னம்பலம் பேரின்பநாயகம் |
| மு/1053 | திருமதி. பரமேஸ்வரி தனபாலசிங்கம் |
| மு/1065 | திருமதி. சறோஜினிதேவி கந்தசாமி |
| மு/1097 | திரு. வெற்றிவேலு மயில்வாகனம் |
| மு/1145 | திரு. சின்னத்துரை சுந்தரலிங்கம் |
| மு/1173 | திருமதி. ஜெயறஞ்சினி ஜீவகுமார் |
| மு/1220 | திரு. தம்பையா பரமானந்தம் |
| மு/1335 | திரு. மாப்பாணர் தங்கராசா |
| மு/1346 | திருமதி. தெய்வேந்திரராணி மனோகரன் |
| மு/1444 | திரு. கூழயன் நடராசா |
| மு/1467 | திரு. கணபதிப்பிள்ளை இராமலிங்கம் |
| மு/1526 | திரு. மரியாம்பிள்ளை அன்ரனிஜெயநாதன் |

## மன்னார் மாவட்டம்

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| ம/18 | திரு. லோறன்ஸ் பரராசசிங்கம் |
| ம/233 | திரு. சந்தியோகு மரியநாயகம் பர்ணாந்து |
| ம/302 | திரு. இராமசேது பொன்னம்பலம் |
| ம/322 | திரு. அவுரார் மரியதாசன் |
| ம/345 | திரு. இலங்கநாதர் அருளானந்தம் |
| ம/399 | திருமதி. தவமணி கதிரவேலு |
| ம/422 | திரு. வீரகத்தி கமலேஸ்வரன் |
| ம/444 | திரு. பசுபதி சிவசுப்பிரமணியம் |
| ம/487 | திரு. சவிரி பீற்றர் |
| ம/517 | திரு. அமிர்தநாதன் தேவராசன் |
| ம/557 | திரு. அவுறாம்பிள்ளை செபஸ்தியான்பிள்ளை |
| ம/579 | திரு. அலக்சான்டர் வின்சன்குருஸ் |
| ம/582 | திரு. மருசால் தானியேல் அரியரெட்ணம் |
| ம/650 | திரு. சுப்பன் மகேஸ்வரன் |
| ம/654 | திரு. பர்னாந்து சந்தியோகு |
| ம/713 | திரு. வயிரமுத்து ராசதுரை |
| ம/719 | திரு. சவேரியான் பீற்றர் |
| ம/758 | திரு. வரப்பிரகாசம் தேவதாசன் |
| ம/770 | திரு. கதிர்காமு பரதராசன் |

## யாழ்.மாவட்டம்

### பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| கி/ப/59 | திரு. தில்லையம்பலம் சிவகுருநாதன் |
| கி/ப/72 | திரு. கந்தையா பொன்னையா |
| கி/ப/91 | திரு. இராசையா இராசேஸ்வரன் |
| கி/ப/172 | திருமதி. யோகமலர் லோகநாதன் |
| கி/ப/178 | திரு. பொன்னையா தனபாலசிங்கம் |
| கி/ப/183 | திருமதி. சிவபாக்கியம் வேலாயுதம் |
| கி/ப/196 | திருமதி. மனோன்மணி கந்தசாமி |
| கி/ப/209 | திரு. சின்னத்தம்பி ஜெயக்குமார் |
| கி/ப/237 | செல்வி. விஜயகுமாரி கனகரட்னம் |
| கி/ப/296 | திருமதி. பூஞ்சோலை இராசேந்திரம் |
| கி/ப/313 | திருமதி. விமலாதேவி கணேசலிங்கம் |
| கி/ப/321 | திருமதி. யோகேஸ்வரி யோகானந்தம் |
| கி/ப/345 | திரு. துரையப்பா தம்பிமுத்து |
| கி/ப/448 | திருமதி. மாக்கிறேற் சிங்கராசா |
| கி/ப/477 | திருமதி. திருமுகராகினி ஞானசேகரம் |
| கி/ப/556 | திரு. விநாசித்தம்பி மகாலிங்கம் |

# வட, கிழக்கைப் பிரிக்க முயன்றால் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடும்

## - செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கைப் பிரிக்க சிறிலங்கா சனாதிபதி நடவடிக்கை எடுத்தால் நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடுவதை எவரும் தடுக்க முடியாது என ரெலோ அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.

தற்போது நடைபெற்று வருகின்ற அசம்பாவிதங்களை அடுத்து வடக்கு-கிழக்கினை தனியாகப் பிரிப்பது குறித்து சனாதிபதி ஆலோசித்து வருவதாக சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்துக் கேட்டபோதே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமாதானம் ஏற்படுவதற்கு உதவ வேண்டிய சனாதிபதி இவ்வாறு செயற்படுவது நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கை தனித்தனியாகப் பிரிக்க சனாதிபதி நடவடிக்கை எடுத்தால் அதனால் வீண் சிக்கல்கள் ஏற்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அதன் மூலம் வடக்கு-கிழக்கு இலங்கையிலிருந்து நிரந்தரமாகப் பிரிந்துபோகும் வாய்ப்பு உள்ளது என்று நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

தற்போது விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்புக்களைக் கொண்ட நிறுவனங்களை நடத்தி வருகின்றனர்.

இலங்கை மத்திய வங்கி வட்டி வீதங்களை அவ்வப்போது மாற்றி அமைத்தாலும் விடுதலைப் புலிகளின் வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வட்டியை வழங்கி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

# முகமாலையில் போராளி கைது ஓர் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல்

## யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

முகமாலைச் சோதனைச் சாவடியில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரும் மூன்று பணியாளரும் கைது செய்யப்பட்டமை அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என்று யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று முகமாலைச் சோதனைச்சாடியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான உண்மை நிலையை தெளிவுபடுத்துவதற்காக நேற்று முன்தினம் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளருடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மானிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் கிருபாகரன், அரியகுமார் சாந்தகுமார், ஆகிய இருவரும் சமையல் பணிக்காக கிளிநொச்சிக்கு அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இருவரையும் சமையல் பணியாளர் இயவன் பஸ்ஸில் அழைத்துச் சென்றார்.

சில தீய சக்திகளின் வழிகாட்டலுக்கு எடுபட்ட, உண்மை நிலையை அறியாத ஆறுமுகம் கிருபாகரனின் வளர்ப்புத் தாயார் முகமாலைச் சோதனைச்சாவடிக்குச் சென்று கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் படைத் தரப்பினாலும் பொலிசாரினாலும் திட்டமிட்டு அச்சுறுத்தி வாக்கு மூலம் பெறப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் போராளி புகழ்மாறன் தனியாகச் சென்றபோது அவரையும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தி கைது செய்தனர். இந்தச் சம்பவம் ஒரு அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகும். இந்த விடயம் தொடர்பாக கண்காணிப்புக்குழுவிற்கு முறையிட்டுள்ளோம்.

நாங்கள் ஆட்கடத்தலிலோ, ஆயுதக் கடத்தலிலோ ஈடுபடவில்லை. இந்த விடயம் வேண்டுமென்றே ஆட்கடத்தலில் ஈடுபட்டதாக புனையப்பட்ட சம்பவம். சாதாரணமாக 24 வயதை அண்மித்த இருவரை எவ்வாறு கடத்திச் செல்ல முடியும்? இது திட்டமிட்டு வேண்டுமென்றே செய்யப்பட்ட செயல் எனத் தெரிவித்ததுடன், பொறுப்பற்ற இச் சம்பவம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்து வருகிறோம் எனவும் இளம்பரிதி மேலும் தெரிவித்தார்.

## -சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கு-

# உறுப்பினரை நியமிக்க சனாதிபதிக்கு உத்தரவிடுமாறும் நீதிமன்றத்தில் மனு

அரசியலமைப்புச் சபையின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளோரை சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவிற்கு நியமிக்குமாறு சனாதிபதிக்கு உத்தரவிடும்படி கூறி நேற்று மேல் முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், சனாதிபதி உட்பட பதினெட்டு பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

17ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அமைய அரசியலமைப்பு சபையினால் பரிந்துரை செய்யப்படுவோரை தேர்தல் ஆணைக்குழுவிற்கு சனாதிபதியே நியமிக்க வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சாவகச்சேரியில் மேலும் பல வீடுகளில் புதிய படை முகாம்கள் அமைப்பு

(வடமராட்சி)

யாழ். கண்டி வீதியின் சாவகச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தை அண்டியுள்ள பகுதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் படைத்தளம் அமைக்கும் நடவடிக்கையை நேற்று படைத் தரப்பு ஆரம்பித்துள்ளது.

ஈ.பி.டி.பி. அமைப்பின் அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் இராணுவ நிரந்தர காவலரண்கள் அமைக்கப்பட்டு அந்த அலுவலகத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் அயலில் உள்ள வீடுகளையும் உள்ளடக்கி படை முகாமை அமைக்கும் நடவடிக்கையை படைத்தரப்பு ஆரம்பித்துள்ளது.

சாவகச்சேரியின் தெற்குப் புறமாக கணிசமான வீடுகளைப் படைத்தரப்பு தமது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள நிலையில் மேற்படி பகுதியில் இருந்து நுணாவில் வரையில் பல வீடுகளை ஆக்கிரமித்துள்ள நிலையில், மேலும் மேலும் வீடுகளை படைத்தரப்பு முகாமாக அமைத்து வருவது அப்பகுதி மக்களிடையே பலத்த அச்சத்தை உருவாக்கியுள்ளதுடன் வயல்வெளிப் பிரதேசத்தின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு படைத்தரப்பு இவ்வாறான ஆக்கிரமிப்பைச் செய்வதாக அப்பகுதி நிறுவன அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன. (27)

# இலங்கை கல்வி அதிபர் பதவி; வழிகாட்டல் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை அதிபர் பதவியினருக்கான விளைத்திறன் தடை தாண்டல் வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 25ஆம் 26ஆம் திகதி காலையும் மாலையும் கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த சகல அதிபர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறும் கல்வியமைச்சு தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் மேற்படி பரீட்சை தொடர்பான கருத்துரைகளை வழங்கவுள்ளதாகவும் இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் சி. சரவணபவானந்தனும் தமிழீழ கல்விக்கழகத்தினரும் தெரிவித்துள்ளனர். (பா)

# பல்கலை. தொழிற்சங்கங்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நேற்று கொழும்பில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளது.

தமது கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து உரிய பதில் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று அந்த அமைப்பின் இணைச் செயலாளர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

### மீளக்.....

போராளிகள் குடும்பநலன்காப்பக பொறுப்பாளர் குமரன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனதுணைப் பொறுப்பாளர் மதன்ராஜ். வவுனியா வடக்கு நிர்வாகப் பொறுப்பாளர் நந்தி, வவுனியா வடக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (10)

### முஸ்லிம்களின்..

டும்.இரு இனங்களும் ஒற்றுமையுடன் இருப்பது அவசியமாகும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### சாரதி....

இருப்பதை உணர்ந்து வாகனத்திலிருந்து இறங்கி திருத்த முற்பட்ட வேளை வாகனம் இவர் மீது ஏறியதால் சாரதி அந்த இடத்திலேயே பலியானார்.

கனகாம்பிகைக்குளம் அரை ஏக்கர் திட்டத்தைச் சொந்த இடமாகவும் வவுனியா மகாஇறம்பைக்குளத்தில் வசித்தவருமான வ.மகாலிங்கம் (வயது 48) என்பவரே பலியானார். (05)

### கண்ணிவெடி....

டுப் பகுதியில் மீட்கப்பட்ட வெடிபொருட்களின் ஒரு பகுதியினை செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி நாயாற்றுப் பகுதியில் செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இந்நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (10)

### பலாலி.....

னர் 600 மீற்றர் எல்லைக் கோட்டின் ஊடாக படையினர் புல்டோசரினால் துப்பரவுப் பணியையும் மேற்கொண்டிருந்தனர். இந்த நிலையில் வெளியாகியுள்ள படையினரின் அறிவித்தல் மக்கள் மத்தியில் பதற்றத்தை உண்டு பண்ணியுள்ளது.

### தமிழீழ....

யோசனைகளை அரசு ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் உங்கள் முடிவுகள் எப்படி இருக்கும் எனக் கேட்கப்பட்டதற்கு நாங்கள் திட்ட வரைவினை கொடுக்க இருக்கிறோம். அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். சமாதானத்தை இலங்கைத்தீவில் ஏற்படுத்த வேண்டும் எனில் தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 2.45 மணியளவில் புறப்பட்ட இக்குழுவினர் இடைத்தங்கல் பயணத்தின் மூலம் நேற்றுக் காலை பிரான்சை சென்றடைந்திருக்கின்றார்கள். இக்குழுவில் மூத்த தளபதி கேணல் கருணா, விடுதலைப்புலிகளின் சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன், பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தூயவன் மற்றும் கஸ்ட்ரோ, பாரதிராஜ், தொல் காப்பியன், அலெக்ஸ், நெடியோன், அறிவு, ஜோர்ஜ் அடங்கியிருக்கிறார்கள். இவர்களுடன் நோர்வேத் தூதரக அதிகாரி தோமஸ் பிராங்கினும் பாரிசுக்கு சென்றிருக்கிறார். அரசாங்கத்தின் இடைக்காலத் திட்டம் குறித்து ஆராய்வதற்கென அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் பிரான்சில் உள்ளகக் கூட்டம் நடைபெறுகிறது.

### மக்கள்....

ஆயுதம் தாங்கிய பொலிசார் மக்களை இறக்கி விட்டு வரும் போது தமக்கு தண்ணீர் எடுத்து வர வேண்டும் என்று, கண்டிப்பான உத்தரவை விடுத்துள்ளனர்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த பேருந்து சாரதி அது எனது வேலையல்ல எனத் தெரிவித்துள்ளார். இந் நிலையில் ஆயுத முனையில் மீண்டும் சாரதி பொலிசாரால் எச்சரிக்கப்பட்டுள்ளார். இதற்கு மீண்டும் அடிபணிய மறுத்த சாரதி அப்படியென்றால் தான் யாழ். செல்லப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனால் நெடுந்தீவுக்கான ஒரே ஒரு பேருந்து சேவையும் தடைப்படும் நிலை உருவாகியுள்ளது. (53)

### புலிகளின்.....

சமர்ப்பித்த பதில் வரைவுகளுக்கிடையில் உள்ள வேறுபாடுகள் பற்றியும் ஆராய்வார்கள் எனவும் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்படி வரைவில் காணப்படும் வேறுபாடுகள் பற்றியும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிகள் குறித்தும் பேச்சுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளிடம் அரசு கையளித்த இடைக்கால நிர்வாக திட்டவரைவு பற்றி புலிகள் பாரிசில் நடத்திவரும் மாநாடு நிறைவு பெற்றதும் நோர்வே ஏற்பாட்டாளர் எரிக் சூல் ஹெய்ம் பாரிஸ் செல்வார் என அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (லோ)

### மக்கள் மறியல்....

திரும்புச் செல்லும் மக்கள் மட்டுமே செல்ல முடியும் என இராணுவம் கூறிவருவதனால் மடுத்தேவாலய சூழலில் உள்ள 500க்கு மேற்பட்ட பொதுமக்கள் இவ்வீதியினூடாகச் செல்வதில் பெரும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

### கிழக்கு....

விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் ஆகியோர் கலந்து கொண்ட மற்றுமொரு சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

பிரதமர் அலுவலகத்தில் எதிர்வரும் 26ஆம்திகதி நடைபெறவுள்ள சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### அம்பாறை....

இந்நிலையில், கல்முனை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுகளில் நேற்றிரவு 6.00 மணி முதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. இன்று அதிகாலை 5.00 மணி வரை அது அமுலில் இருந்தது.

இந்நிலையில், கல்முனை, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, சம்மாந்துறை பள்ளிவாசல்களின் தலைவர்கள் காரைதீவு விசேட அதிரடிப்படை முகாமில் இடம் பெற்ற மாநாடொன்றில் பங்கேற்றனர். இதில் சகஜ நிலையை எவ்வாறு ஏற்படுத்துவது என்று ஆராயப் பட்டதாகக் கூறப்படுகின்றது.

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 08-09-1968

ஆண்டவன் மடியில் 22-08-1997

### லெப்.கேணல் தூயமணி/ லெனின்

(வைத்தியநாதன் சிவநாதன்)

கேணல் கிட்டு பீரங்கிப் படையணி

கருணையிலே கண்ணனாய்
கவர்ச்சியிலே முருகனாய்
கடமையிலே வில்வனாய்
களங்களிலே வீர வேங்கையாய்
காவியத் தலைவனின் கரங்களாய்
கண்களிலே நீங்காத ஓவியமாய்
காலமெல்லாம் எம்மை கலங்கவைத்த செல்வமே
இவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

முகவரி:சிவபாதி,
212,சிவசுந்தரம் வீதி,
ஊற்றுக்கச்சி,
கிளிநொச்சி. (கி-4470)

ஐயா,அம்மா,சகோதர,சகோதரிகள்,
அத்தான்மச்சான்,அண்ணியார்,
மருமக்கள்,பெறாமக்கள்,உறவினர்,
நண்பர்கள்,சகபோராளிகள்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.